**பூஜாப்பிடிய பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 14 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பூஜாபிடிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 38,291,274 கூட்டுப்பெறுமதியான பெறவேண்டிய 05 கணக்கு மீதிகளில் 01 ஆண்டு காலத்தை மிகைத்து இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,510,560 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 71,505 ஆக இருந்தது. 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 37,915,431 தொகையான மீதியொன்று மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதியான ரூபா 28,481,866 தொகையினுள் 01 ஆண்டினை மிகைத்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,777,123 ஆக இருந்ததுடன், 5 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 3,283123 ஆக இருந்தது

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,950,622 தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.3 இணக்கமிண்மைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் 178(7), 207 மற்றும் 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.1(அ), 6.3.1(ஆ) மற்றும் 6.3.6 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,445,951 பெறுமதியான கபட், அலுமாரி மற்றும் டயர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,787,258 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,992,559 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,137,578 | 3,119,364 | 3,156,978 | 2,197,088 | 3,461,000 | 3,135,199 | 3,836,729 | 2,234,704 |
| (ii) | வாடகை | 4,971,300 | 1,097,650 | 866,155 | 316,645 | 3,811,600 | 924,600 | 1,049,995 | 84,165 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 2,245,100 | 1,573,250 | 1,573,250 | -- | 1,511,000 | 1,623,000 | 1,623,000 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 14,475,000 | 17,460,758 | 25,387,539 | 19,645,448 | 11,401,000 | 19,026,872 | 21,663,144 | 9,837,078 |
| | மொத்தம் | 24,828,978 | 23,251,022 | 30,983,922 | 22,159,181 | 20,184,600 | 24,709,671 | 28,172,868 | 12,155,947 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

ஒட்டுமொத்த வருமான விடயங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 உள்ளவாறு நிலுவை ரூபா 12,155,947 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 22,159,181 ஆக இருந்த காரணத்தினால் அந்நிலுவை வருமானங்களின் அதிகரிப்பு 82 சதவீதமாக இருந்தது.

### 2.2.3 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 3,117,1181 ஆக இருந்தது. அதில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையே ரூபா 1,234,049 மற்றும் ரூபா 1,921,139 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. இது 55 சதவீதமாகவும் 62 சதவீதமாகவும் இருந்தன. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,182,603 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் வருமான சேகரிப்பு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன. 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 1,854,549 மீதியொன்று மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கமநல சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்தும் பல வருடங்களாக அறவிடப்பட வேண்டிய ரூபா 92,761 ஆன நிலுவை வீதவரி காணப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,485 நிலுவை ஏக்கர் வரியொன்று காணப்பட்டதுடன் அத்தொகையில் ரூபா 12,579 தொகை 01 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலவீச்சில் நிலுவையாக இருந்தன. 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 12,891 தொகையான மீதியொன்று மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

2017 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு அம்பதன்ன வியாபார தொகுதியின் 03 மற்றும் 04 ஆம் இலக்க கடைகளிலிருந்து ரூபா 272,000 ஆன கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அத்தொகை 01 ஆண்டிற்கும் 09 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலவீச்சில் அறவிடப்படாமல் இருந்தன. 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் ரூபா 136,000 தொகையொன்று மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 810,011 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 18,254,537 தொகையும் பெறவேண்டியதாகக் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

(அ) ரூபா 7,581,000 பெறுமதிக்கு தயாரிக்கப்பட்ட 29 அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கு உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் அங்கீகாரத்திற்காக 2017 ஏப்ரல் 20 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதில் முன்மொழிவுகள் மற்றும் அங்கீகாரத்திற்கு அனுப்பாத வேறு முன்மொழிவொன்றும் 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டமையால் முன்மொழிவுகளை அங்கீகரிப்பதற்கு 08 மாத காலமொன்று எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட 05

அபிவிருத்தி முன்மொழிவுகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்படுத்த முடியாமல் இருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டில் செற்படுத்தப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய 06 அபிவிருத்தி முன்மொழிவுகளில் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளாறு பௌதீக முன்னேற்றம் 20 சதவீதம் முதல் 40 வரையான வீச்சில் காணப்பட்டன.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றுவதற்காக பிரதேச சபை நிதியம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டுகளில் 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,150,000 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 78(1) ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் பொது சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 270,000 தொகை நோக்கத்திற்கு செயற்பாடுகளை நிறைவேற்றப்படாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே 05 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 355,000 இலிருந்து செலவிடல் 02 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(ஈ) அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படும் உக்கக்கூடிய கழிவுகள் மாதமொன்றிற்கு 32-35 தொன் அளவில் 2.5 டிராக்டர் லேட்டிற்காக ரூபா 500 வீதம் கொடுப்பனவு செய்து குண்டகசாலை பிரதேச சபையின் கொம்போஸ்ட் பிரிவிற்கு வெளியேற்றப்பட்டிருந்த போதிலும் கொம்போஸ்ட் உற்பத்தி அல்லது முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பில் பிரதேச சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக சபை அறிந்திருக்காமையினால் அதற்'காக பாதீட்டில் நிதிஏற்பாடு செய்வதற்கோ அல்லது திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

(அ) 2017 நவம்பர் 30 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட 21 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) அலுவலக உதவியாளர், வெளிக்கள தொழிலாளர்கள், நீர் வேலை தொழிலாளர் மற்றும் சனசமூக உதவியாளர் பதவிகளை வகிக்கும் 06 நபர்கள் வருமானம் சேகரித்தல், வருமான கோவை நடவடிக்கைகள், நூலக உதவியாளர் மற்றும் ஈ-நென இல்ல செயற்திட்ட நடவடிக்கைகள் போன்ற பொறுப்பான அலுவலக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) பிரதேச சபையில் சேவை புரியும் நிரந்த காவலாளி இரவு நேர காவல் வேலைக்காக ஈடுபடுத்தப்படாமல் சுகாதார தொழிலாளரொருவர் இரவு காவலுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

**3.3 செயற்பாட்டு திறமையீனங்கள்**

(அ) 2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 588 கட்டிட விண்ணப்பங்களில் கிடைத்து அதில் 469 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 16 இணக்கச் சான்றிதழ் மாத்திரம்

வழங்கப்பட்டிருந்தன. இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த 16 அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக தனியார் பெருந்தோட்டக் கம்பனிக்குரிய காணியொன்று கையேற்கப்பதற்கு காணி சிருத்திருத்த ஆணைக்குழுவிற்கு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 250,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் பொறுப்பில் காணப்பட்ட குழாய் நீர் உபகரணங்களில் 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 657,422 ஆக இருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற / குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓட்ட நிலைமையில் காணப்படுகின்ற காணப்படாத வெவ்வேறு வகையான ரூபா 13,650,662 பெமதியான 05 வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத வேன் வண்டியொன்றும் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

(ஆ) முன்பள்ளி மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக 2012 பெப்ரவரி 23 ஆந் திகதி ரூபா 60,000 இற்கு கொள்வனவு செய்திருந்த 200 முன்பள்ளி பாடசாலைப் பைகளில் ரூபா 15,600 பெறுமதியான 52 பைகள் விற்னை செய்யப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

### 3.4.2 வாகனப் பயன்பாடு

கெப் வண்டியொன்று 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்த ரூபா 60,400 ஆன சேதமொன்று இடம்பெற்றிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நி.பி 103(1)(ஆ) பிரகாரம்பொலிஸ் அறிக்கை அல்லது முறைப்பாட்டின் பிரதியொன்றோ பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விபத்து இடம்பெற்று 05 நாட்களுக்குள் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 11 ஆந் திகதி வரை கெப் வண்டி எடுத்து வரப்பட்டிருக்கவில்லை.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) 2017 திசெம்பர் 12 ஆந் திகதி காணப்பட்ட களஞ்சிய பேரேட்டு மீதிகள், பௌதீக அளவுகளுடன் ஒப்பிடும் போது ரூா 21,571 பெறுமதியான 04 பொருள் உருப்படிகளில் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

(ஆ) களஞ்சிய பதிடேுகளில் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் முன்கொண்டு வரப்பட்டிருந்த பெறுமதி கண்டுபிடிக்க முடியாத 10 பிரஷ் நிபல் மற்றும் 33 PVC நீர் உபகரணங்கள் பௌதீக பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 04 வருமான விடயங்களில் 32 சதவீதம் முதல் 226 சதவீதம் வரையிலும், 04 செலவின விடயங்களில் 23 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 54 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,210,000 ஆன நூறு சதவீத நிதிஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) தேவைப்பாடு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் எதிர்வரும் ஆண்டிற்காக முன்னைய ஆண்டின் போது செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு பொறியியலாளர் மதிப்பீடு தயாரித்து அதன் பிரகாரம் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 28 அபிவிருத்தி முன்மொழிவுகளுக்காக மதிப்பீட்டுப்பெறுமதி குறிப்பிடப்பட்டு பாதீட்டு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு வேறு கடமைகள் கையளிக்கப்பட்டிருந்த காரணத்தினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை சுயாதீனமாகவும் போதியளவும் நிறைவேற்ற முடியாதிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் |  | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான நிருவாகம் | i. நிலுவை வருமான அறவிடப்படாமை |
| | | ii. குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடாமை |
| | | iii. குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமை |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | i. நிதியம் முறைப்படி பயன்படுத்தப்படாமை |
| | | ii. சொத்துக்கள் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டமை. |
| (இ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | i. சரியாக கணக்கீடு செய்யப்படாமை |
| | | ii. கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் முறையான தீர்வுசெய்யப்படாமை |
| (ஈ) | களஞ்சியக் கட்டுப்பாடு | i. கைதவிர்க்கப்பட வேண்டிய சொத்துக்கள் கைதவிர்ப்புச் செய்யப்படாமை |
| | | ii. களஞ்சியப் பற்றாக்குறை காணப்படல் |